# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 337/2015,/பே

ஆணை நாள்: 23 –10–2018

*******

திரு. S. ராமசாமி,
உதவிப் பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
ஒசூர் ரோடு, கோயம்புத்தூர். -- முறையீட்டு மனுதாரர்

1.திருமதி .லலிதாமணி,
உதவி பொறியாளர்,
ஒத்தக்கல்மண்டபம் பேரூராட்சி.
2.திருமதி. சுகந்தி,
உதவி பொறியாளர்,
மதுக்கரை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.
3.திரு.கணேஷ் சங்கர்,
ஆனைமலை பேரூராட்சி தொகுப்பு,
கோயம்புத்தூர் மாவட்டம்.
4.திரு.ரகுபதி,
இளநிலை பொறியாளர்,
காரமடை பேரூராட்சி தொகுப்பு,
கோயம்புத்தூர் மாவட்டம்.
5.திரு.மகேந்திரன்,
உதவி செயற்பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கோயம்புத்தூர்.

--- எதிர் மனுதாரர்கள்

ஆணை.

திரு. S. இராமசாமி, உதவிப் பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், கோவை மண்டலம், கோயம்புத்தூர் மாவட்டம், அவர்களது 21.12.2015 நாளிட்ட

முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.12.2015 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனுஎண். 337/2015 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

திரு. S. இராமசாமி, உதவிப் பொறியாளர், தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் மீது கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுகள் தெரிவித்துள்ளார்.

**1.திருமதி. லலிதாமணி, உதவிப் பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள் :-.**

(1) வெள்ளலூர் பேரூராட்சி 8–வது வார்டு, முல்லை நகரில், தார்ச்சாலை அமைக்க தயார் செய்த மதிப்பீட்டில் Prime Coat & tack coat ஆகிய இனங்களில் நிர்ணயிக்கப்பட்டதை விட ரூ.88,000/– அதிகமாக மதிப்பீட்டில் கூடுதல் தொகை சேர்த்து மதிப்பீடு தயாரித்துள்ளார்.

(2) கோவை மாவட்டம், பள்ளப்பாளையம் பேரூராட்சி, வார்டு எண்.4 சிந்தாமணிபுதூர் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுது பார்ப்பதற்கு (படிக்கட்டுகள் அமைத்தல்) பணிக்கு TWAD Board மூலம் ரூ.88,000/– என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், உதவிப் பொறியாளரால் மேற்படிப் பணிக்கு ஏணிப்படிகள் அமைத்த வகையில் கிலோ அளவுகளில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ரூ.3,18,755/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ரூ.2,30,755/–க்கு கூடுதல் தொகை நிர்ணயித்து மதிப்பீடு தயாரித்துள்ளார்.

(3) பள்ளப்பாளையம் பேரூராட்சி, கதிரி மில்ஸ் பின்புறம் மயானப்பகுதியில் ரூ. 8.25 லட்சம் மதிப்பீட்டில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணியில் உரிய தொழில் நுட்ப அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமலும், தன்னிச்சையாக ஒரு டிசைன் தயாரித்து மதிப்பீடு தயாரித்ததில் விதி மீறல்கள் செய்துள்ளார்.

(4) வெள்ளலூர் பேரூராட்சி 8–வது வார்டில், ரூ.49.90 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சிங்காநல்லூர் சாலை மற்றும் பட்டினம் சாலையில் 980 மீட்டர் தார்ச்சாலை அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டிருந்தும், மேற்படி சாலையினை உயர் அலுவலரின் அனுமதியினை பெறுவதை தவிர்க்கும் நோக்கத்தில் குறைவான நீளத்தில் செயல்படுத்தியுள்ளார்.

(5) கிணத்துகடவு பேரூராட்சியில், வார்டு எண் 13–ல் யூனியன் அலுவலகம் எதிர்புறம் ரூ.35.00லட்சம் மதிப்பீட்டில் வடிகால் அமைக்கும் பணியில் அளவுகள் மற்றும் மேலளவுகள் மேற்கொண்டதில் அளவு புத்தகத்தில் பின் தேதியிட்டு தேதிகள் திருத்தம் செய்து முறைகேடு செய்துள்ளார்.

(6) இருகூர் பேரூராட்சியில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் உலர் களம் அமைக்கும் பணியில் Truss களின் அளவுகளை கிலோ கணக்கில் முறைகேடாக நிர்ணயம் செய்தது மற்றும் அளவு புத்தக பதிவுகளை தவறாக பதிந்து முறைகேடு செய்துள்ளார்.

(7) கிணத்துகடவு மற்றும் பெரியநெகமம் பேரூராட்சிகளின் பாலூட்டும் தாய்மார்கள் அறைகள் கட்டும் பணியில் நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை.

**2.திருமதி. சுகந்தி, உதவிப் பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள்:-**

எட்டிமடை பேரூராட்சி, வார்டு எண்.8 K.G. சாவடி பகுதியில், அங்கன்வாடி பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணியில் வெதரிங் கோர்ஸ் பணிக்கு வரையறுக்கப்பட்ட தொகையினை

விட கூடுதல் தொகையினை மதிப்பீட்டில் சேர்த்து கணக்கிட்டதின் மூலம் ரூ.75,564/- கூடுதலாக சேர்த்து மதிப்பீடுகள் தயாரித்துள்ளார்.

**3.திரு. கணேஷ்சங்கர், இளநிலைப் பொறியாளர் மீதான குற்றச்சாட்டுக்கள் :-**

திரு. கணேஷ் சங்கர், இளநிலை பொறியாளர் பல்வேறு பணிகளுக்கான மதிப்பீடுகளில் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மதிப்பீடுகளை மாற்றி பணிகள் மேற்கொண்டுள்ளார் எனவும் அவ்வாறு மாற்றப்பட்ட இனங்களில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் முறையீட்டு மனுதாரரான திரு. ராமசாமி உதவிப் பொறியாளரின் சுருக்கொப்பம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

**4.திரு ரகுபதி, இளநிலை பொறியாளர் மீதான குற்றச்சாட்டுக்கள் :-**

திரு.ரகுபதி,இளநிலைபொறியாளர்,எண்.4-வீரபாண்டி,மற்றும், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிகளில், தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு Tack coat இனத்தில் மதிப்பீடுகளில் இருமுறை விலைநிர்ணயம் செய்து மதிப்பீடு தயாரித்துள்ளார்.

2013-14ம் ஆண்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பிளாட்பாரம் அமைத்து ஷெட் அமைக்கும் பணியில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள மேற்கூரை இரும்பு பாலங்களுக்கு Truss முறையாக அளவீடுகள் செய்து மதிப்பீடு தயாரிக்காமல், கூடுதல் விலை நிர்ணயம் செய்து மதிப்பீடு தயாரித்துள்ளார்.

**4. திரு கே.மகேந்திரன் உதவி செயற்பொறியாளர் மீதான குற்றச்சாட்டுக்கள் :-**

திரு.கே.மகேந்திரன், உதவி செயற்பொறியாளர், மேற்கண்ட அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட தவறான மதிப்பீடுகள் குறித்து முறையீட்டு மனுதாரரால் தகவல் அளிக்கப்பட்ட பின்னரும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும், கோவை மாவட்ட ஆட்சியரால் வெள்ளலூர் பேரூராட்சி குளம் மேம்பாடு செய்யும் பணியில், ஒரே பணிக்கு 4 தொகுதிகளாக பிரித்து, மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இது குறித்து மாவட்ட ஆட்சியரால் மேற்படி பணியில் நடைபெற்ற குறைபாடுகள் குறித்து பொறியியல் பிரிவினரிடம் விசாரணை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி செயற்பொறியாளர் மேற்கண்ட குளம் மேம்பாடு பணி ரூ.40.00 லட்சம் மதிப்பிட்டில் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி குளம் பணிக்கான மதிப்பீடுகள் ஒப்பளித்ததில் குறைபாடு உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

2013-14ம் நிதியாண்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஒதுக்கீட்டில், கோவை மாவட்டத்தில் 7 பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதில், மதுக்கரை பேரூராட்சியில் இத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற பணிகளுக்கு முறையாக அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஏனைய 6 பேரூராட்சிகளில் இத்திட்டப் பணிகளுக்கு முறையாக அளவுகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர் இவ்வாறான குறைபாடுகளை சுட்டிக்காட்டியதால், தான் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகும் வகையில் தொடர் மாறுதல்கள் செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.01.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்கண்ட குற்றச்சாட்டுக்களுக்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி எதிர் மனுதாரர்களுக்கு ஆணையிடப்பட்டது.

எதிர் மனுதாரர்களான திருமதி. லலிதாமணி, உதவிப் பொறியாளர், திரு ஆர்.ரகுபதி, இளநிலைப் பொறியாளர், திருமதி சு.கு.சுகந்தி உதவிப் பொறியாளர் ஆகியோர் மேற்படி முறையீட்டு மனுவிற்கான தங்களது விளக்கங்களை முறையே 30.12.2015, 23.02.2016 மற்றும் திருமதி.சுகந்தி,உதவிப்பொறியாளரின் நாளிடப்படாத விளக்க அறிக்கைகள் இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்பட்டுள்ளது.

திருமதி. லலிதாமணி, தனது விளக்க அறிக்கையில், தான் ஒத்தக்கல் மண்டபம் பேரூராட்சி தொகுப்பின் கீழ் வரும் ஆறு பேரூராட்சிகளுக்கு தொகுதி பொறியாளராக உள்ளதாகவும், மனுதாரர் தவறான புகார்களை தன்மீது பழிவாங்கும் நோக்கில் செயல்பட்டு தெரிவித்துள்ளதாகவும் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு.ஆர்.ரகுபதி, இளநிலை பொறியாளர், தனது விளக்க அறிக்கையில், தான் காரமடை தொகுப்பில் பணியில் சேர்ந்த ஆகஸ்டு 2014 முதல், தான் 12 தார்ச்சாலைப் பணிகள், எண்-4 வீரபாண்டி பேரூராட்சியிலும், இதில் 6 தார்ச்சாலைப் பணிகள் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியிலும் மேற்கொண்டதாகவும் இப்பணிகளில் தான் ஒரே இனத்திற்கு இரு முறைகள் பட்டியல் தயாரிக்கும் பணியினை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்துள்ளார். திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளில் பல்வேறு அளவுகளில் இரும்பு கம்புகள் உபயோகப்படுத்தப்பட்டதாகவும், உயர் அலுவலர்களின் அறிவுரையின் பேரிலேயே கூறை அமைக்கும் பணிக்கான இரும்பு கம்பிகள் உபயோகப்படுத்தப்பட்டு மதிப்பீடுகளின் அடிப்படையில் அளவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

திருமதி. சுகந்தி, தனது விளக்க அறிக்கையில் தான் எட்டிமடை பேரூராட்சியில் ரூ62,000/- மதிப்பீட்டில் அங்கன்வாடி கழிப்பிடம் கட்டும் பணி கட்டப்பட்டதில், மேற்கூரை முழுவதும் மழையால் ஒழுகுவது மற்றும் சில பழுதுகள் பார்வையிடப்பட்டு மேற்படி பணிக்கு ரூ.1.45 லட்சம் மதிப்பீடு தயார் செய்து எட்டிமடை பேரூராட்சி செயல் அலுவலரின் கடித 173/2015/நாள் 21.07.2015ன் மூலம் உதவி செயற்பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி கோரப்பட்டு மேற்படி பணி மேற்கொள்ளும் போது, மேற்கூரையில் Weathering course அமைக்கும் பணியில் நீளம் மற்றும் அகலம் மட்டுமே குறிப்பிட்டு கனமீட்டர் என தட்டச்சு செய்யப்பட்டதால் (thickness 0.075 m) கனமீட்டருக்கு உரிய விலையினை சதுர மீட்டரில் பெருக்கியதாகவும், இது முறையீட்டு மனுதாரரால் கண்டுபிடிக்கப்பட்டு தவறு நேர்ந்துள்ளதை தனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்ததாகவும், அதற்கு தான் அவரை இத்தவறினை திருத்தி சரி செய்ய கோரியதாகவும், அதற்கு முறையீட்டு மனுதாரர் தன்னால் இதனை திருத்த இயலாது என தெரிவித்ததாகவும், இதற்கிடையில் உதவி செயற்பொறியாளரின் 23.07.2015 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட கடிதம் மூலம் மேற்படி குறைபாடுகளை சுட்டிக்காட்டி வரப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட தவறுகள் சரி செய்யப்பட்டு மதிப்பீட்டினை 24.07.2015 அன்று மீள சமர்ப்பித்து உதவி செயற்பொறியாளரின் கையொப்பம் பெறப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி தவறு தனது பணிச்சுமை காரணமாக ஏற்பட்டதாகவும் அதை உடன் சரிசெய்து தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டதாகவும் இதில் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு அரசுக்கு எந்த நிதி இழப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 10.11.2016-ஆம் நாளிட்ட அறிவிப்பாணையில், மேற்படி புகார் மனு குறித்து தொடர்புடைய ஆவணங்களை முழுமையாக ஆய்வு செய்து குற்றச்சாட்டில்

குறிப்பிட்டுள்ள இனம் தொடர்பான தணிக்கைத் தடைகள் இருப்பின் அவற்றினையும் உள்ளடக்கிய விரிவான அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4)(a) ன் கீழ் கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

கோவைமண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது கடித ந.க.எண். 2709/2016/பே.1/நாள்.30.01.2017ன் மூலம் தனது ஆய்வறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

**1.திருமதி.எம்.லலிதாமணி. உதவிப் பொறியாளர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கான ஆய்வறிக்கை:-**

1. வெள்ளலூர் பேரூராட்சி, 8-வது வார்டு முல்லை நகரில் தார்ச்சாலை அமைக்க ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டில் தொழில் நுட்ப அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டபோது Prime coat & Tack coat ஆகிய இனங்களில் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்திற்கு கூடுதலாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதை கண்டறிந்து, சரியான மதிப்பீடு தயாரித்து மீள சமர்ப்பிக்க பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளரின் 28.07.2015-ஆம் நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் கோப்புகள் வாயிலாக கண்டறியப்பட்டதாகவும், இதன் அடிப்படையில் மதிப்பீடு சரியான முறையில் திருத்தம் செய்து மீள சமர்ப்பித்து உரிய தொழில் நுட்ப அனுமதி பெற்று பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பேரூராட்சிக்கு ஏற்படவிருந்த ரூ.88,000/- நிதியிழப்பு தவிர்க்கப்பட்டுள்ளதாகவும், இதன் அடிப்படையில் உதவிப் பொறியாளர் மதிப்பீடு தயார் செய்யும்போது கவனக்குறைவாக செயல்பட்டது குறைபாடு எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

2. பள்ளபாளயம் பேரூராட்சியில் 2015-16-ஆம் ஆண்டு பேரூராட்சி பொது நிதியில் ரூ.5.25 லட்சம் மதிப்பீட்டிலான சிந்தாமணிபுதூர் டேங்க் பழுது பார்த்தல் (படிக்கட்டுகள் அமைத்தல்) பணிக்கு கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித ந.க.எண். 1264/2015/பே.1/நாள்.28.07.2015ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், "தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்" தரப்படுத்தப்பட்ட விலை விவரப்பட்டியல் படி M.S.Ladder அமைப்பதற்கு ரூ.88,000/- என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், M.S.Ladder க்கு உதவிப் பொறியாளரால் கிலோ அளவுகளில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ரூ.3,18,755/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்படி மதிப்பிட்டில் ரூ.2,30,755/- கூடுதல் என தெரிவித்து, மதிப்பீடுகள் துறை ரீதியான தரப்படுத்தப்பட்டுள்ள விவரப் பட்டியல் அடிப்படையில் தயாரித்து சமர்ப்பிக்க 24.08.2015 நாளிட்ட கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டு, ஏற்கனவே அளிக்கப்பட்ட கருத்துருவிற்கு தொழில் நுட்ப அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், பள்ளப்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் பேரூராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பு குறித்து தெரிவிக்காமல் 31.08.2015-ஆம் தேதிய மன்றக் கூட்டத்தில் பொருள் எண் 13-ல் சேர்க்கப்பட்டு, மேற்படி தொழில் நுட்ப அனுமதி மறுக்கப்பட்டு மேற்படி டேங்கிற்கு படி கட்டுதல் பணியானது துறை ரீதியாக மேற்கொள்ளாமல் உபயதாரர் மூலம் இரும்பு படிக்கட்டுகளை கூடுதல் தரத்துடனும் மிகவும் பாதுகாப்பான முறையில் செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி பணி எந்த உபயதாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டது

என்பதற்கான ஆவணங்கள் ஏதும் கோப்பில் இல்லை எனவும், மேலும் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதில் பேரூராட்சியால் செலவினங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என பள்ளப்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண். 270/2016/நாள். 24.01.2017ன் மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் உதவிப் பொறியாளர் தங்களது பணியினை செய்யத் தவறி விதி மீறல்கள் மேற்கொண்டுள்ளது பெருங்குறைபாடானது எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

3. பள்ளப்பாளையம் பேரூராட்சி, கதிரி மில்ஸ் பின்புறம் மயானப்பகுதில் 2015-16ஆம் ஆண்டு பேரூராட்சி பொது நிதியில் ரூ.8.25 லட்சம் மதிப்பீட்டில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிக்கு கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித ந.க.எண்.1264/2015/பே.1/நாள்.29.07.2015ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட நிலையில், "தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்" அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்படவேண்டும், உரிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய Structure Design வரைபடம் இணைக்கப்படவேண்டும் "என தொழில் நுட்ப அனுமதி கோரி அளிக்கப்பட்ட கருத்துரு மறுக்கப்பட்டு கோவை மண்டல உதவி செயற்பொறியாளரின் கடித நாள் 24.08.2015ன் மூலம் திருப்பப்பட்ட நிலையில், தொழில் நுட்ப அனுமதி பெறாமலும் உபயதாரர் மூலம் பணியினை மேற்கொள்ள அனுமதி பெறாமலும் பணி மேற்கொண்டு, விதி மீறல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான கோப்புகள் ஏதும் இல்லாதது ஆய்வில் கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய வடிவமைப்பின்டி இப்பணியினை முடிக்காமல் குடிநீர் அவசர அவசியம் மற்றும் மயான பகுதியில் மேற்படி தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ஒப்பந்தக்காரரால் அவரது சொந்த செலவில் மேற்கொள்ளப்பட்டதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது விதிகளை மீறி செயல்பட்டதாக அறியப்பட்டது. இருப்பினும் மேற்படி பணி மேற்கொண்டமைக்கு பேரூராட்சி மூலம் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படவிலலை என பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 270/2016/நாள்.24.01.2017ல் தெரிவித்துள்ளதாகவும், இந்நிகழ்வில் செயல் அலுவலர் மற்றும் உதவிப் பொறியாளர் தங்களது பணிகளை செய்ய தவறி விதி மீறல்கள் மேற்கொண்டுள்ளது பெருங்குறைபாடு எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

4. வெள்ளலூர் பேரூராட்சி, 8-வது வார்டில், 2014-15-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.49.90 லட்சம் மதிப்பீட்டில் சிங்காநல்லூர் மற்றும் பட்டிணம் சாலையில், தார்ச்சாலை அமைத்திட பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை கடித ந.க.எண். 6766/2014/ஆ.5/நாள்.23.12.2014ல் நிர்வாக அனுமதியும், செயற்பொறியாளரின் ந.க.எண் 239/EE/2014-15, நாள். 02.01.2015மூலம் (980 மீட்டர்) தொழில் நுட்ப அனுமதியும் அளிக்கப்பட்ட நிலையில், பொதுமக்கள் நலன் கருதி சாலையின் அகலத்தை விரிவுபடுத்தி **அமைக்க மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று** மதிப்பீட்டிற்குட்பட்டு 9.00 மீட்டர் அகலத்தில், 400 மீட்டர் நீளம் கொண்ட சாலையும், 5.50 மீட்டர் அகலத்தில் 320 மீட்டர் நீளமும், கொண்ட சாலை அமைப்பதற்கு உதவிப் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் Note file தயார் செய்து பேரூராட்சிகளின் இயக்கக செயற்பொறியளரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சிகளின் இயக்குநரால்

நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்கு **பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதியின்றி திட்டப் பணிகளில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது என்ற விதிமுறைகளை** பின்பற்றாமல், உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் மேற்படி பணியினை நிர்வாக அனுமதியில் வழங்கப்பட்ட அளவுகளின்படி செய்யாமல் குறைத்து பணி மேற்கொண்டுள்ளது வரம்பு மீறிய செயல் என தெரிவித்துள்ளார்.

மேற்கண்டவாறு அகலத்தை அதிகப்படுத்தியதன் மூலம் மதிப்பீட்டின்படி நிர்ணயிக்கப்பட்ட நீளத்திற்கு குறைவாக பணி முடிவுற்றுள்ளது. மேற்படி சாலைப் பணியில் நீளத்தை குறைத்து மேற்கொள்ள தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கிய அலுவலரிடமே திருத்திய மதிப்பீடு மற்றும் பணி முடிவறிக்கையும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குறைவாக முடிக்கப்பட்ட நீளத்தினை சரிகட்டும் வகையில் பொது நிதி மூலம் பணி மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ரூ.8.00 லட்சம் மதிபபீட்டில் 190 மீட்டர் நீளத்திற்கு சாலை பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்பதல் பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் பெற்று பொது நிதியின் மூலம் பணி முடிக்கப்பட்டு உதவிப் பொறியாளர்(மனுதாரர்) சுருக்கொப்பம் பெறப்படாமல் மண்டல உதவி செயற்பொறியாளரால் பட்டியல் மேலொப்பம் செய்யப்பட்டு, தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதோடு இந்நேர்வில் பெருங்குறைபாடு ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

5. கிணத்துகடவு பேரூராட்சியில் வார்டு எண்-13, யூனியன் அலுவலகம் எதிர்புறம் வடிகால் அமைக்க ரூ.35.00 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு தொகை பட்டுவாடா செய்ய, பட்டியல் மேலொப்பம் பெறும் பொருட்டு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குரக உதவி செயற்பொறியாளருக்கு பட்டியல் பின்தேதியிட்டு வழங்குமாறு கேட்டதின் அடிப்படையில், மேற்படி பட்டியல் பின்தேதியிட்டு வழங்க முடியாது என திருப்பட்டுள்ளது என்ற புகாரின் அடிப்படையில் ஆவணங்களை பரிசீலித்ததில் மேற்படி பணியானது 10.07.2015 ல் முடிவுற்றதாக உதவிப் பொறியாளர் திருமதி.லலிதாமணி என்பவரால் ஒப்பமிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் அதற்கான பட்டியல் உதவி செயற்பொறியாளரால் 01.10.2015ம் தேதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் உதவிப் பொறியாளர் திருமதி. லலிதாமணி, என்பவரால் பட்டியல் மேலொப்பம் வாங்கும்பொருட்டு 14.07.2015 என தேதியிட்டு அதனை 12.09.2015 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டதாகவும், இதன் மூலம் மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு பின் தேதியிட்டு பட்டியல் மேலொப்பம் பெற்றது ஆவணங்களின் அடிப்படையில் உறுதியாகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. இருகூர் பேரூராட்சியில், 2013-14-ஆம் ஆண்டில் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், உலர் களம் அமைத்து ஷெட் அமைக்கும் பணியில் Truss களின் எடையினை நீளம், அகலம் மற்றும் தடிமனை அடிப்படையாகக் கொண்டு அளவீடு செய்யப்படாமல் எடைமனையில் வைத்து எடையிடப்பட்டு அளவு புத்தகத்தில் பதியப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது, அளவு புத்தகத்தின் வாயிலாக அறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுவாக ஒரு பணி மேற்கொள்ளும்போது அதற்கான அளவுகளை அளவு புத்தகத்தின் இடது பக்கத்திலும் அதற்கான தொகை கணக்கீடுகளை வலது பக்கத்திலும் பதியப்படுவது வழக்கம் எனவும், ஆனால் அப்பணிக்கான

பதிவுகளை புகாரில் தெரிவித்துள்ளவாறு வழக்கத்துக்கு மாறாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் வேண்டுமென்றே அவ்வாறாக செயல்பட்டதின் மூலம் பொறியாளரின் பொறுப்பற்ற செயல் உறுதியாவதுடன் புகாரில்குறிப்பிட்டுள்ள விவரம் நிரூபணமாவதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

7. கிணத்துக்கடவு மற்றும் பெரியநெகமம் பேரூராட்சிகளில் பாலூட்டும் தாய்மார்களுக்கான அறைகள் கட்டியது தொடர்பான புகார் தொடர்பாக கிணத்துகடவு பேரூராட்சி ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், தொழில் நுட்ப அனுமதி விவரங்கள் சரியாக பதியப்படவில்லை எனவும் குறைந்த கால இடைவெளியில் அறிவிப்பு வெளியிடப்பட்டும், இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிக்கை செய்யப்பட்ட திட்டம் என்பதால் அவசர அவசியம் கருதி பணிகள் விரைந்து முடிக்கப்படவேண்டியதின் அவசியத்தால் சில நடைமுறைகள் பின்றபற்ற இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என்ற விவரம் அறியப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

பெரியநெகமம் பேரூராட்சியில் ரூ.1.55 லட்சம் மதிப்பீட்டில் தாய்மார்கள் பாலூட்டும் அறைக் கட்டப்பட்டதில் ஒப்பந்தபுள்ளி நடைமுறைகள் பின்பற்றப்படாமல் விலைப்புள்ளி நடை முறை (Quotation Procedure) பயன்படுத்தப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டதற்கான விதி மீறல் கண்டறியப்பட்டதாகவும், குறைந்த கால இடைவெளியில் அறிவிப்பு வெளியிடப்பட்டு அவசர அவசியம் கருதி பணிகள் விரைந்து முடிக்கப்படவேண்டியதின் அவசியத்தால் சில நடைமுறை விதிகள் பின்பற்ற இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என்ற விவரம் ஆய்வில் அறியப்பட்டதாக கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**2.திருமதி. எஸ்.கே.சுகந்தி, உதவி பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகளுக்கான அறிக்கை:-**

எட்டிமடை பேரூராட்சியில், வார்டு எண்.8 க.க.சாவடி பகுதியில் அங்கன்வாடி பழுது பார்த்தல் பணிக்கு திருமதி.சுகந்தி, உதவிப் பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வெதரிங் கோர்ஸ் அமைக்கும் பணிக்கு கன மீட்டரில் விலைகள் வழிவகை செய்யப்படுவதற்கு பதிலாக சதுர மீட்டரில் விலைகள் கணக்கிடப்பட்டு ரூ.1,45,000/-க்கான மதிப்பீட்டில் ரூ.76,496/- கூடுதலாக சேர்க்கப்பட்டது கண்டறியப்பட்டதாகவும், மேற்படி தவறான மதிப்பீடுகள் குறித்து கோயம்புத்தூர் மண்டல உதவி செயற்பொறியாளரால் 23.07.2015ல் திருப்பி அனுப்பப்பட்டு, மதிப்பீடுகள் பின்னர் சரி செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திருமதி. சுகந்தி என்பவர் மதிப்பீடு தயாரிக்கும்போது விதி மீறியுள்ளது குறைபாடு என தெரிவித்துள்ளார்.

**3. திரு கணேஷ்சங்கர், இளநிலைப் பொறியாளர் மீதான முறைகேடுகளுக்கான அறிக்கை :-**

மனுதாரர் தனது குற்றச்சாட்டில் இளநிலைப் பொறியாளர் திரு. கணேஷ்சங்கர், பல்வேறு பணிகளுக்கு மதிப்பீடுகளில் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மதிப்பீடுகளை மாற்றி பணிகள் மேற்கொண்டுள்ளார் எனவும் அவ்வாறு மாற்றப்பட்ட மதிப்பீடுகளில் மனுதாரராகிய திரு எஸ்.ராமசாமி, உதவிப் பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம் அவர்களின் சுருக்கொப்பம் இல்லை என்ற புகாரினையடுத்து, மேற்படி இளநிலை பொறியாளர் பணிபுரிந்த பேரூராட்சி தொகுப்புகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பீடுகளை பரிசீலிக்கப்பட்டதில் திரு.எஸ்.இராமசாமி, தலைமையிடத்து உதவிப்

பொறியாளரின் சுருக்கொப்பம் இல்லாமலும், தொழில் நுட்ப அனுமதி வழங்கும் பதிவேட்டில் பதியாமல் வரிசை எண் இடாமல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டதாகவும், ஆனால் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் மதிப்பீடுகள் மாற்றப்பட்டதற்கான எந்த ஒருமுகாந்திரமும் கோப்புகளின் வாயிலாக கண்டறிய இயலவில்லை என்பதால் இக்குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது எனவும் தெரிவித்துள்ளார்.

திரு.கணேஷ்சங்கர், ஆனைமலை பேரூராட்சி தொகுப்பில் பணிபுரிந்தபோது தார்ச்சாலை அமைக்கும் பணிகளில் கீழ்கண்ட முறைகேடுகள் புரிந்துள்ளது ஆவணங்களை பரிசீலித்ததில் கண்டறியப்பட்டதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு.கணேஷ்சங்கர், இளநிலை பொறியாளர், ஆனைமலை பேரூராட்சி தொகுப்பில் பணிபுரிந்தபோது, ஆனைமலை பேரூராட்சி, அண்ணா நகரில் கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டிடத்திற்கு பட்டியல் தயாரிக்க அளவு புத்தகத்தில் 1.2 x 1.2 என்ற அளவில் 6 சன்னல்கள் பதிவு செய்யப்பட்டு தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டினைத் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொண்டதில் மேற்படி கட்டிடத்தில் 1.2 x 1.2 அளவு கொண்ட 4 சன்னல்களும், 1.2 x 0.9 அளவு கொண்ட இரண்டு சன்னல்களும் இருந்தது கண்டறியப்பட்டது. தவறுதலாக அளவுகளை பதிவு செய்து தொகை வழங்க மேற்படி இளநிலை பொறியாளர் திரு.கணேஷ்சங்கர் உறுதுணையாக இருந்துள்ளது பெருங்குற்றமென தெரிவித்துள்ளார்.

திரு. கணேஷ் சங்கர், இளநிலை பொறியாளர் ஆனைமலை தொகுப்பில் பிப்ரவரி 2015 முதல் ஆகஸ்ட் 2015 வரை பணிக்கு சென்றிருப்பது வருகைப் பதிவேட்டின் மூலம் உறுதி செய்யப்பட்டதாகவும் இதன் மூலம் புகார் மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டான மேற்படி பொறியாளர் பணி ஆய்வாளரை வைத்து பணிகளை மேற்கொள்கிறார் என்ற குற்றச்சாட்டு தவறானது எனவும் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில், மண்டல உதவி செயற்பொறியாளர் மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கும் பதிவேடு சம்பந்தமாக வரப்பெற்ற புகாரினைத் தொடர்ந்து, ஆய்வு மேற்கொண்டதாகவும், புகாரில் தெரிவித்துள்ளவாறு போலியாக பராமரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்ட பதிவேடுகள் மற்றும் முத்திரைகள் ஏதும் ஆய்வில் கண்டறியப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி புகாரில் தெரிவித்துள்ளவாறு 19 பேரூராட்சிகளில், பல பணிகளுக்கு தொழில் நுட்ப அனுமதி எண் குறிக்கப்படாமல் அனுமதி வழங்கப்பட்டும், நடைமுறையில் உள்ள பதிவேட்டில் பதியப்படாமல் உள்ளது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு ரகுபதி, இளநிலை பொறியாளர் என்பவர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கான ஆய்வறிக்கை:-**

திரு. ரகுபதி, இளநிலை பொறியாளர் என்பவர், காரமடை பேரூராட்சித் தொகுப்பில் பணி புரிந்தபோது, பெரியநாயக்கன்பாளையம் மற்றும் நரசிம்மநாய்க்கன்பாளையம் பேரூராட்சிகளின் தார்ச்சாலை அமைக்கும் பணிகளுக்கு இரண்டு முறை தொகை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட புகார் குறித்து கள ஆய்வு மேற்கொண்ட போது அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை எனவும் இவர் மீது தெரிவித்துள்ள புகார் தவறானது எனவும் தெரிவித்துள்ளார்.

பெரியநாய்க்கன் பாளையம், கூடலூர் மற்றும் எண்.4.வீரபாண்டி பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2013–14 ல் உலர் களம் அமைத்து ஷெட் அமைக்கும் பணியில் பயன்படுத்தப்பட்ட Truss களின் எடையினை நீளம், அகலம் மற்றும் தடிமனை அடிப்படையாக கொண்டு அளவீடு செய்யப்படாமல் எடைமனையில் வைத்து ஒட்டுமொத்தமாக எடையிடப்பட்டு அதனை அளவு புத்தகத்தில் பதியப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ள நிகழ்வு விதி மீறிய செயல் எனவும் இச்செயலுக்கு திரு ரகுபதி, இளநிலை பொறியாளர் பொறுப்பாவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு கே.மகேந்திரன், உதவி செயற்பொறியாளர் மீதான முறைகேடுகளுக்கான ஆய்வறிக்கை:-**

இவர் மீது புகார் மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட நான்கு புகார்களுக்கான கள ஆய்வில் மேற்படி அலுவலர் கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்தபோது மேற்படி விதி மீறல்கள், முறைகேடுகள் மற்றும் விடுதல்கள் ஆகியவற்றினை தொழில் நுட்ப ரீதியில் உயர் அலுவலர் என்ற நிலையிலும் மற்றும் பணிகளுக்கு மேலளவு மேற்கொள்ளும்போதும் உரிய கூர்ந்தாய்வு மேற்கொண்டிருந்தால் மேற்கண்ட தவறுகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம் எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கோவை மண்டலம் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.04.2017 நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் 31.05.2017 அன்று ஆஜராக தெரிவித்து முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் ஆஜராகவில்லை. இருப்பினும் 15.05.2018ல் பிறிதொரு வழக்கு சம்பந்தமாக இம்முறைமன்ற நடுவத்தில் (முறையிட்டு மனு எண் 212/2016 மற்றும் 271/2016 )குறித்து விசாரணைக்கு ஆஜரான போது இம்முறையீடு குறித்தும் மனுவில் உள்ள புகார்கள் குறித்தும் கோரப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் இம்முறையீட்டு மனு தொடர்பாக கூடுதல் விளக்கங்கள் ஏதும் தனது வாக்குமூலத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, எதிர் மனுதாரர்களின் விளக்க அறிக்கைகள், மேற்படி மனுவிற்கான கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கள ஆய்வு அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

கோவை மண்டல பேரூராட்சிகளில் பணிபுரியும் பொறியியல் அலுவலர்களால் 6 பணிகளுக்கு மொத்த மதிப்பீடு ரூ.90.78 லட்சத்தில் ரூ.3.15 லட்சத்திற்கு கூடுதலாக விலை நிர்ணயம் செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளரால் திருப்பப்பட்டு, உரிய தரப்படுத்தப்பட்ட விலை விகிதங்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்க அறிவுறுத்தியதின் பேரில், மதிப்பீடுகள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற விவரத்தினை எதிர் மனுதாரர்களில் ஒருவரான திருமதி.சுகந்தி உதவிப் பொறியாளர், மதுக்கரை பேரூராட்சி தனது விளக்கத்தில் ஏற்றுக்கொண்டுள்ளதோடல்லாமல் இந்த விவரங்கள் கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கை மூலமும் உறுதியாகிறது. எனவே, இவ்வாறு மேற்படி பொறியியல் பிரிவினரால் அடிக்கடி பணிகளுக்கான மதிப்பீடுகள் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதங்களை பின்பற்றாமல் தன்னிச்சையாக அதிக தொகைக்கு மதிப்பீடு தயாரித்துள்ளதும், மேலும்

வெள்ளலூர் குளம் மேம்பாடு பணிக்கு முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளவாறு ஒரே பணிக்கு 4 தொகுதிகளாக பிரித்து மதிப்பீடு தயாரித்து பணி மேற்கொண்டுள்ளதும் உறுதியாகிறது. இதன் மூலம் எதிர் மனுதாரர்களின் மீதான புகார் மற்றும் நிர்வாக சீர்கேடு போன்ற குற்றச்சாட்டுகள் நிரூபணமாகின்றன. எனவே, அலுவலர் குழு ஒன்றினை ஏற்படுத்தி இது போன்று எத்தனை பணிகளில் அதிகப்படியாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் பேரூராட்சிகளுக்கு /அரசுக்கு இழப்பீடுகள் இருப்பின் அது குறித்தும் கண்டறிந்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர்

7/11/18

பெறுநர்

1.திரு. S. ராமசாமி,
உதவிப் பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
ஒசூர் ரோடு, கோயம்புத்தூர்.

2.திரு கே.மகேந்திரன்,
ஊதவி செயற்பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கோயம்புத்தூர்

2.திருமதி.எம்.லலிதாமணி
உதவி பொறியாளர்,
ஒத்தக்கல்மண்டபம் பேரூராட்சி.

3.திருமதி. எஸ்.கே.சுகந்தி,
உதவி பொறியாளர்,
மதுக்கரை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

4.திரு.கணேஷ் சங்கர்,
ஆனைமலை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

5.திரு.ரகுபதி,
இளநிலை பொறியாளர்,
காரமடை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.
6.திருகே..மகேந்திரன்,
உதவி செயற்பாறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கோயம்புத்தூர்.
7.பேரூரட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 108
8. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கோவை மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர்.